# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : **11**

## இஸ்லாம் / ඉස්ලාම් - I

நேரம்: 1 மணித்தியாலம்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) நம்பிக்கை என்பதைக் குறிக்கும் அரபுச் சொல் யாது?
   1) அகீதா 2) தௌஹீத் 3) ஈமான் 4) மஆத்

2) அகீதாவைப் பாதுகாத்த இமாம்களுள் அடங்காதவர்,
   1) இமாம் அஷ்அரி (றஹ்) 2) இமாம் மாதுருதி (றஹ்)
   3) இமாம் தஹாவி (றஹ்) 4) இமாம் நவவி (றஹ்)

3) அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்று கூறும் அகீதாப்பிரிவினர் யார்?
   1) ஷீயாக்கள் 2) மு.ஃதஸிலாக்கள்
   3) காரிஜிகள் 4) கதரியாக்கள்

4) நன்மை தீமை எடைபோடுதலைக் குறிக்கும் சொல் யாது?
   1) மீஸான் 2) கியாம்
   3) ஹிஸாப் 4) ஸிராத்

5) கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட ஆண்டு (ஹிஜ்ரி) எத்தனை?
   1) 40 2) 30 3) 35 4) 45

6) கலீபா அலி (றழி) அவர்களைக் கொலை செய்த ஹாரிஜியின் பெயர் என்ன?
   1) அபூ லு.ஃலுஆ 2) அப்துர்ரஹ்மானிப்னு முல்ஜிம்
   3) அப்துல்லாஹ் பின் ஸபா 4) அம்ரிப்னு லுஹை

7) உமர் (றழி) அவர்களது ஆட்சியில் 'ஸாஹிபுல் அஹ்தாத்' எனப் பெயர் பெற்ற அதிகாரி யார்?
   1)பொலிஸ் அதிகாரி 2) திரைசேரி செயலாளர்
   3) நீதிபதி 4) இறைவரி அதிகாரி

8) 'இல்ஹாத்' எனும் சொல் குறித்து நிற்பது யாது?
   1) இணைவைத்தல் 2) இறைநிராகரிப்பு
   3) நாஸ்திகம் 4) நயவஞ்சுகம்

9) பிரபஞ்சத்தை வளப்படுத்தல் என்பதைக் குறிக்கும் அரபுப் பதம் என்ன?
   1) இபாதத் 2) கிலாபத் 3) கிஸாதத் 4) இமாரத்

10) அசுத்தமான நீர் என்பதற்கு பிரயோகிக்கப்படும் அரபுப்பதம்,
   1) மாஉல் முஸ்த.ஃமல் 2) மாஉத்தாஹிர்
   3) மாஉத்தஹுர் 4) மாஉல்கலீல்

11) இஜ்திஹாதை அடிப்படையாகக் கொண்ட கலை எது?
1) ஹதீஸ் 2) பிக்ஹு 3) தப்ஸிர் 4) தஜ்வீத்

12) இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களின் பிறப்பிடம் எது?
1) காஸா 2) பக்தாத் 3) கூபா 4) மதீனா

13) எந்த கலீபாவின் காலத்தில் ஹன்பலில் மத்ஹப் அரச மத்ஹபாக பிரகடனப்படுத்தப்பட்டது?
1) கலீபா ஹாரூன் 2) கலீபா உஸ்மான் (றழி)
3) கலீபா வலீத் 4) கலீபா முதவக்கில்

14) இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் (றஹ்) அவர்களது பிரதான ஆசிரியர் யார்?
1) இமாம் ஷாபிஈ 2) இமாம் மாலிக் (றஹ்)
3) இமாம் அபூதாவூத் (றஹ்) 4) இமாம் ஹம்மாத் (றஹ்)

15) பலஸ்தீனில் பிறந்து எகிப்தில் மரணித்த இமாமின் பெயர் என்ன?
1) அஹ்மத் 2) முஹம்மத்
3) நு.்.மான் 4) மாலிக்

16) மதீனாவில் பிறந்த இமாமின் பெயர் என்ன?
1) இமாம் மாலிக் (ரஹ்) 2) இமாம் திர்மிதி (ரஹ்)
3) இமாம் ஹன்பலி (ரஹ்) 4) இமாம் அபூஹனிபா (ரஹ்)

17) முஹம்மத் என்ற இயற்பெயரைக் கொண்டிராத இமாம் யார்?
1) இமாம் புஹாரி (ரஹ்) 2) இமாம் திர்மிதி (ரஹ்)
3) இமாம் நஸாஈ (ரஹ்) 4) இமாம் இப்னு மாஜா (ரஹ்)

18) இமாம் முஸ்லிம் அவர்கள் பிறந்த இடம் எது?
1) கஸ்வின் 2) சிகிஸ்தான் 3) மதீனா 4) நைசாபூர்

19) சிசு உருவாக்கம் பற்றிய அல் குர்ஆனின் கருத்தை ஆய்வு மூலம் உறுதிப்படுத்திய அறிஞர் பெயர் என்ன?
1) பேராசிரியர் கீத்மோர் 2) பேராசிரியர் ஹம்ஸா அலவி
3) அபுல் கலாம் 4) கலாநிதி சுக்ரி

20) கஷ்ஷாப் எனும் தப்ஸீரை எழுதிய இமாமின் பெயர் என்ன?
1) இமாம் தபரி 2) இமாம் கஸ்ஸாலி
3) இமாம் ஸமஹ்சரி 4) இமாம் ராபி

21) க.்.பாவை முதன்முதலாக கட்டிய நபியின் பெயர் என்ன?
1) நூஹ் நபி 2) ஆதம் நபி 3) இப்ராஹிம் நபி 4) முகம்மத் நபி

22) மக்கா வெற்றி இடம் பெற்ற ஹிஜ்ரி ஆண்டு எது?
1) ஹி – 6 2) ஹி – 7 3) ஹி – 8 4) ஹி – 10

23) மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள இடம் எது?
1) மக்கா 2) மதீனா 3) எகிப்து 4) பலஸ்தீன்

24) இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சியடைந்த ஆண்டு எது?
1) 1924 2) 1948 3) 1088 4) 1290

25) நபி (ஸல்) மதீனாவில் எந்த ஸஹாபியின் வீட்டில் இருந்து கொண்டு மஸ்ஜிதுன் நபவியின் நிர்மானப் பணிகளை ஆரம்பித்தார்கள்

1) அபூ கதாதா 2) அபூ ஐயூப் 3) அபூ உமாமா 4) ஸஹ்ல்

26) நோன்பு நோற்க தடை செய்யப்படாத நாள்,

1) துல்ஹஜ் பிறை 10
2) துல்ஹஜ் பிறை 11
3) சவ்வால் பிறை 01
4) சவ்வால் பிறை 02

27) ருகூஉ, ஸுஜூது இல்லாத தொழுகை எது?

1) பெருநாள் தொழுகை
2) கிரகணத் தொழுகை
3) ஜனாசா தொழுகை
4) மழைத்தேடித் தொழும் தொழுகை

28) இஸ்லாத்தின் துணை மூலாதாரங்களுள் முதலிடம் வகிப்பது?

1)இஜ்மா 2) கியாஸ் 3) மஸ்லஹா 4) உர்பு

29) ஹிராக்குகை அமைந்துள்ள மலையின் பெயர் என்ன?

1) ஹிரா மலை
2) ஜபலுந்நூர்
3) ஜபலுர் ரஹ்மான்
4) ஸபா மலை

30) சொல் சார்ந்த ரித்தத்திற்கு ஓர் உதாரணம் எது?

1) வட்டி எடுத்தல்
2) நபிமார்களை அவமதித்துப் பேசுதல்
3) அல்குர்ஆனை எரித்தல்
4) அல்லாஹ்வை விசுவாசிக்காமை

31) கீழே X,Y நிரல்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களை கருதுக.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1) அகீதா | A – மலக்குகள் |
| 2) இபாதா | B – முழாரபா |
| 3) முஆமலாத் | C – தொழுகை |
| 4) முனாகஹாத் | D – பஸ்ஹு |

1) ABCD 2) ACBD 3) BDCA 4) CBAD

32) பின்வரும் ஹதீஸ் தொகுப்புகளில் ‘ஸிஹாஹுஸ்ஸித்தாவில்’ அடங்காதது,

1) முஅத்தா 2) திர்மிதி 3) அபூதாவுத் 4) முஸ்லிம்

33) நபி (ஸல்) அவர்கள் இறுதிப்பேருரையை நிகழ்த்திய இடம்,

1) ஹிரா மலையடிவாரம்
2) ஸவ்ர் மலையடிவாரம்
3) உஹத் மலையடிவாரம்
4) அரபா மைதானம்

34) ‘ஈமான் கொண்டவரே! உங்களில் ஒருவர் மற்ற ஒருவரின் சொத்தை அநியாயமான முறையில் உண்ண வேண்டாம்’ என்பது,

1) அல்குர்ஆனின் கூற்று
2) நபி(ஸல்) அவர்களின் கூற்று
3) ஒரு ஸஹாபியின் கூற்று
4) ஓர் இமாமின் கூற்று

35) தொழுகையில் முதலாம் அத்தஹிய்யாத் நிறைவேற்றுதல்,

1) பர்ழ்
2) ஜாஇஸ்
3) ஸுன்னத்
4) முபாஹ்

36) பெருநாள் தினத்தன்று குளிப்பது எவ்வகையைச் சாரும்,

1) வாஜிப் 2) ஹராம் 3) மக்ருஹ் 4) ஸுன்னத்

37) அதிகமான ஹதீஸ்களை அறிவித்த ஸஹாபி யார்?

1) இப்னு உமர் (ரழி) 2) அபூஹுரைரா (ரழி)
3) ஆயிஷா (ரழி) 4) இப்னு அப்பாஸ் (ரழி)

38) ஒளுவின் பர்ளுகள் எத்தனை?

1) 1 2) 2 3) 3 4) 4

39) 'மவ்ழூஆன ஹதீஸ்' என்பது எதனைக் குறிக்கும்?

1) ஆதார பூர்வமான ஹதீஸ் 2) பலவீனமான ஹதீஸ்
3) புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ் 4) உறுதியான ஹதீஸ்

40) நபி (ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த காலம் எத்தனை வருடங்கள்

1) 10 வருடங்கள் 2) 40 வருடங்கள்
3) 53 வருடங்கள் 4) 63 வருடங்கள்

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : **11**

**இஸ்லாம் / ඉස්ලාම් - 2** நேரம்: 2 மணித்தியாலங்கள்

- முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்

1. சுருக்கமான விடை தருக.
   i. இல்முல் அகீதாவுக்கு அடிப்படையாக அமைந்துள்ள அம்சங்கள் இரண்டையும் குறிப்பிடுக.
   ii. இஸ்லாம் கூறும் நற்பண்புகள் நான்கை எழுதுக.
   iii. ஆன்மீக பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
   iv. நபிமார்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் இரண்டையும் குறிப்பிடுக.
   v. அல்குர்ஆனின் முன்னால் தமது பலவீனத்தை ஒப்புக் கொண்ட இருவரின் பெயரைத் தருக.
   vi. இமாம் புஹாரி (றஹ்), இமாம் முஸ்லிம் (றஹ்) அவர்கள் பிறந்த ஊர்களைக் குறிப்பிடுக.
   vii. வஹியின் இரு வகைகளையும் எழுதுக.
   viii. கலீபா உமர் (றழி) அவர்களின் ஆளுமைப் பண்புகள் இரண்டை குறிப்பிடுக.
   ix. 'அஸதுல்லாஹ்' என்றால் என்ன? இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டவர் யார்?
   x. நற்பண்புகள் பற்றிய ஒரு அல்குர்ஆன் வசனத்தினை எழுதுக.

(10x2=20 புள்ளிகள்)

2. i. கலீபா அலி (றழி) அவர்களின் இரு சிறப்புப் பெயர்களைத் தருக.
   ii. அலி (றழி) அவர்களது காலத்தில் முஸ்லிம்களிடையே இடம் பெற்ற யுத்தங்கள் யாவை?
   iii. அலி (றழி) அவர்களது பணிகள் 5ஐக் குறிப்பிடுக.

(2+3+5=10)

3. i. பிக்ஹுக்கலைக்குப் பங்காற்றிய நான்கு இமாம்களைப் பெயரிடுக.
   ii. இஜ்திஹாத் என்பதை வரைவிலக்கணப்படுத்துக?
   iii. முஜ்தஹிதுகளுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் யாவை?

(2+3+5=10)

4. i. ஹதீஸ் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
   ii. அல்குர்ஆனின் அறிவியல் சார் அற்புதங்களுக்கு 3 உதாரணங்கள் தருக.
   iii. அல்குர்ஆன் தொகுக்கப்படல் பற்றி சுருக்கமாக எழுதுக.

(2+3+5=10)

5. i. நற்பண்புகள் பற்றி ஒரு ஹதீஸைக் குறிப்பிடுக.
   ii. இஸ்லாத்தின் பார்வையில் நல்லொழுக்கமாகக் கருதப்படக்கூடிய விடயங்கள் மூன்றை வகைப்படுத்துக.
   iii. நோன்பு எவ்வாறு நற்பண்புகளை வளர்க்கின்றது என்பதை விளக்குக.

(2+3+5=10)

6. i.‘ஹஜ்ஜின் முஹர்ரமாத்கள் ’ என்றால் என்ன?
   ii. ஹஜ், உம்ரா என்பவைகளை நிறைவேற்ற முடியுமான 3 முறைகளும் யாவை?
   iii. அர்கானுல் கியாஷை விளக்குக.

(2+3+5=10)

7. பின்வருவனவற்றுள் இரண்டுக்கு விளக்கக் குறிப்பு எழுதுக.
   i. பிக்ஹுல் அவ்லவிய்யாத்
   ii. நபி (ஸல்) அவர்களது மதீனா ஹிஜ்ரத்
   iii. தயமம் செய்யும் முறை
   iv. ஐங்காலத் தொழுகை

(5+5=10)